தமிழ்நாடு தகவல் ஆணையம்

எண்.19, அரசு பண்ணை இல்லம். பேர்ன்பேட்டை, நந்தனம், சென்னை - 600 035
தொலைபேசி எண். 044 - 2951 5590

ஆணை நாள் - 11.11.2026

முன்னிலை

திரு அபய் குமார் சிங், இகாப (ஓய்வு)
மாநில தகவல் ஆணையர்

*****

வழக்கு எண்.SA 9659/F/2024

திரு.R.கண்ணன் .. மேல்முறையீட்டாளர்

/எதிர்/

பொதுத்தகவல் அலுவலர் /
தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம்
(மதுரை) லிமிட்., .. பொது அதிகார அமைப்பு
பைபாஸ் ரோடு, மதுரை-625010.

ஆணை-II

இவ்வழக்கின் மீதான விசாரணை 07.10.2026 அன்று, நேரடி விசாரணை மேற்கொண்டு பிறப்பித்த உத்தரவினைத் தொடர்ந்து பொது அதிகார அமைப்பின் சார்பாக பொதுத்தகவல் அலுவலர் திரு.N.மாரிமுத்து, உதவி மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக் கழகம் (மதுரை) லிமிடெட்., விருதுநகர் மண்டலம் அவர்கள் 11.11.2026 இன்று ஆணையத்தின் முன் நேரில் ஆஜராகி மனுதாரருக்கு கடித எண்.விருது/பொதஅ/SA-9659-F-2024/2026. நாள் 30.10.2026 நாளிட்ட கடிதம் வாயிலாக தகவல்கள் வழங்கியிருப்பதாக கூறி அதற்கான ஆவணங்களை ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார். மேலும் அப்போதைய பொதுத்தகவல் அலுவலர் திரு.ஆண்டவர் (மவமே), துணை மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் (மதுரை) லிட்., விருதுநகர் மண்டலம் அவர்களது எழுத்துமூல விளக்கத்தினையும் ஆணையத்தின் முன் சமர்ப்பித்தார்.

ஆணையத்தின் முன் உள்ள ஆவணங்களை பரிசீலனை செய்கையில் மனுதாரருக்கு வழங்கப்பட்ட தகவல்களை இவ்வாணையம் ஏற்கிறது. அப்போதைய பொதுத்தகவல் அலுவலர் அவர்களின் எழுத்துமூல விளக்கத்தினை இவ்வாணையம் ஏற்கவில்லை என்பதை பதிவு செய்து கீழ்காணும் உத்தரவினை இவ்வாணையம் பிறப்பிக்கிறது.

" மனுதாரர் தாக்கல் செய்த சட்டப்பிரிவு 6(1)ன் கீழான மனுவிற்கு வழங்கக்கூடிய தகவலை வழங்காத அப்போதைய பொதுத்தகவல் அலுவலர் திரு.ஆண்டவர் (மவமே), துணை மேலாளர், தமிழ்நாடு அரசு போக்குவரத்துக்கழகம் (மதுரை) லிட்., விருதுநகர் மண்டலம் அவர்கள் சட்டப்பிரிவு 19(8)(b)ன் கீழ் இழப்பீட்டு தொகையாக ரூ.2000/- (ரூபாய் இரண்டாயிரம் மட்டும்) மனுதாரருக்கு வழங்கி அதனை மனுதாரர் பெற்று ஏற்பளிப்பு செய்த விவரத்தினை 02.12.2026 அன்று அப்போதைய பொதுத்தகவல் அலுவலரிடமிருந்து பெற்று தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் அவர்கள் இவ்வாணையத்தில் நேரில் ஆஜராகி சமர்ப்பிக்குமாறு இவ்வாணையம் ஆணையிடுகிறது."

ஓம்/-(அபய் குமார் சிங்)
மாநில தகவல் ஆணையர்
(ஆணையத்தின் ஆணைப்படி)

உதவிப் பதிவாளர்

<u>வழக்கு எண்.SA 9659/F/2024</u>
பெறுநர்
<u>பொது அதிகார அமைப்பு:-</u>
பொதுத்தகவல் அலுவலர் /
தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம்
(மதுரை) லிமிட்.,
பைபாஸ் ரோடு, மதுரை-625010.

அப்போதைய பொதுத்தகவல் அலுவலர்,
தமிழ்நாடு அரசு போக்குவரத்து கழகம்
(மதுரை) லிமிட்.,
பைபாஸ் ரோடு, மதுரை-625010.
(தற்போதைய பொதுத்தகவல் அலுவலர் வாயிலாக)

<u>மேல்முறையீட்டாளர்:-</u>

திரு.R.கண்ணன்,
த/பெ G.ராமானுஜம்,
3/2246, மேற்குத்தெரு,
செங்கமலநாச்சியார்புரம்,
SN புரம்(அஞ்சல்),
சிவகாசி (வட்டம்),
விருதுநகர் மாவட்டம்-626130.

Copy to file: KR/PA